ADR
Association for Democratic Reforms

myneta.info
Puducherry Election Watch



# 2024
# மக்களவை தேர்தலில் போட்டியிடும் புதுச்சேரி வேட்பாளர்கள் பற்றிய ஆய்வு

ஜனநாயக சீர்திருத்த சங்கமும், தேசிய தேர்தல் கண்காணிப்பகம் என்ற சுமார் 1200 உறுப்பினர்களை கொண்ட தேசிய பிரச்சாரமும், தேர்தல் சீர்திருத்தம், ஜனநாயக மேம்பாடு, ஆளுகையில் மேம்பாடு ஆகிய துறைகளில் பணியாற்றி வருகின்றன.

இதன் அங்கமாக புதுச்சேரி தேர்தல் கண்காணிப்பகம் 2011 முதல் செயல்பட்டு வருகிறது. முன்னாள் நீதியரசர் தாவீது அன்னுசாமி, முன்னாள் காவல்துறை கண்காணிப்பாளர் முனிசாமி, மக்கள் உரிமை கூட்டமைப்பு கோ. சுகுமாறன், மக்கள் நாடி தேவநாதன், ரைஸ் ரோச் விக்டர், அன்பாலயம் மேரி, கருணாலயம் அங்காளன், அம்பேத்கார் பேரவை திருமால் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். 2024 மக்களவை தேர்தலுக்கான 26 வேட்பாளர்களில் 25 வேட்பாளர்கள் தாக்கல் செய்த பிரமாண பத்திரங்களை புதுச்சேரி தேர்தல் கண்காணிப்பகம் ஆய்வு செய்துள்ளது. ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு:

## குற்றப் பின்னணி

### கிரிமினல் வழக்கு உள்ள வேட்பாளர்கள்

26 வேட்பாளர்களில், ஆய்வு செய்த 25 வேட்பாளர்களில் 2 வேட்பாளர்கள் (8%) தங்கள் மேல் மீது கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று தெரிவித்துள்ளனர்.

### கடுமையான கிரிமினல் வழக்கு உள்ள வேட்பாளர்கள்

ஆய்வு செய்த 25 வேட்பாளர்களில், 1 வேட்பாளர் (4%) மீது கடத்தல், பணப்பறிப்பு, பொது சொத்துக்கு பங்கம் விளைவித்தல் போன்ற கடுமையான வழக்குகள் உள்ளன.

### கட்சி வாரியாக கிரிமினல் வழக்கு உள்ள வேட்பாளர்கள்

அ.தி.மு.க வேட்பாளர் மற்றும் 1 சுயேட்சை மீது கிரிமினல் வழக்குகள் உள்ளதாக தங்கள் வேட்புமனுவில் தெரிவித்துள்ளனர். இவர்களில் சுயேட்சை வேட்பாளர் மீது கடுமையான குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

# பொருளாதாரப் பின்னணி

## கோடீஸ்வர வேட்பாளர்கள்

ஆய்வு செய்த 25 வேட்பாளர்களில், 5 வேட்பாளர்கள் (20%) கோடீஸ்வரர்கள்.

## கட்சி வாரியாக உள்ள கோடீஸ்வர வேட்பாளர்கள்

காங்கிரஸ், பா.ஜ.க., அ.தி.மு.க, சுசி கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளை சேர்ந்த வேட்பாளர்கள் ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாக சொத்து வைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். ஒரு சுயேட்சை வேட்பாளரும் ஒரு கோடிக்கும் அதிகமாக சொத்து வைத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

## சராசரி சொத்து மதிப்பு

2024 நாடாளுமன்ற தேர்தலில் புதுச்சேரியில் போட்டியிடும் வேட்பாளர்களின் சராசரி சொத்து மதிப்பு ரூபாய் 2.23 கோடி ஆகும்.

## அதிக சொத்து உள்ள வேட்பாளர்கள்

4 வேட்பாளர்களிடம் ரூபாய் 2 கோடிக்கும் மேற்பட்ட சொத்து உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். இதில் வேட்பாளர்களின் சுய மற்றும் பிற சொத்துக்களும் அடங்கும்.

அதிக சொத்து உள்ள மூன்று வேட்பாளர்களின் விபரம் :

| வ.எண் | பெயர் | கட்சி பெயர் | மொத்த சொத்து |
|---|---|---|---|
| 1. | அ. நமச்சிவாயம் | பா.ஜ.க. | 31 கோடி |
| 2. | வே. வைத்திலிங்கம் | காங்கிரஸ் | 15 கோடி |
| 3. | ஜி. தமிழ்வேந்தன் | அ.தி.மு.க. | 2.5 கோடி |

## மிகக் குறைவான சொத்து உள்ள வேட்பாளர்கள்

தேர்தலில் போட்டியிடும் 25 வேட்பாளர்களில், மொத்தம் 4 வேட்பாளர்கள் ரூபாய் 1 லட்சத்திற்கும் குறைவாக சொத்து உடையவர்கள் ஆவர்.

மிகக் குறைவாக சொத்து உள்ள மூன்று வேட்பாளர்களின் விபரம் :

| வ.எண் | பெயர் | கட்சி பெயர் | மொத்த சொத்து |
|---|---|---|---|
| 1. | கொளஞ்சியப்பன் | சுயேட்சை | 50,000/- |
| 2. | கே. அருணாச்சலம் | சுயேட்சை | 43,000/- |
| 3. | எஸ். சதீஷ்குமார் | சுயேட்சை | 2,000/- |

## கடன் உள்ள வேட்பாளர்கள்

25 வேட்பாளர்களில், 6 பேர் தங்களுக்கு 10 லட்சத்திக்கும் மேல் கடன் உள்ளதாக தெரிவித்துள்ளனர். பா.ஜ.க. வேட்பாளர் அ. நமச்சிவாயம் தனக்கு 15.94 கோடி கடன் உள்ளதாகவும், அ.தி.மு.க வேட்பாளர் ஜி.தமிழ்வேந்தன் தனக்கு 1.52 கோடி கடன் உள்ளதாகவும், சுயேட்சை வேட்பாளர் ஜி.நிர்மலா தனக்கு 64.50 லட்சம் கடன் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## அதிக வருமானம் உள்ள வேட்பாளர்கள்

மொத்தம் 4 வேட்பாளர்களுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 10 லட்சத்திற்கும் மேல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருமானம் அவருடைய, அவரது மனைவியுடைய, அவரை சார்ந்துள்ளவர்களின் மொத்த வருவாய் ஆகும்.

## வருமானவரி விவரங்களை அளிக்காத வேட்பாளர்கள்

மொத்தம் உள்ள 25 வேட்பாளர்களில் ஒருவர் தனது வருமான வரி பற்றிய தகவல்களை தெரிவிக்கவில்லை. இவர் வருமான வரி தாக்கல் செய்யத் தேவையில்லாத வேட்பாளராகவும் இருக்கக்கூடும்.

# பிற பின்னணி தகவல்கள் (கல்வி, பாலினம், வயது)

## கல்வி

| வ.எண் | கல்வி பிரிவுகள் | ஆய்வு செய்யப்பட்ட வேட்பாளர்கள் |
|---|---|---|
| 1. | எழுதப் படிக்க மட்டும் தெரிந்தவர்கள் | 0 |
| 2. | 5 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1 |
| 3. | 8 ஆம் வகுப்பு தேர்ச்சி | 5 |
| 4. | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 0 |
| 5. | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 5 |
| 6. | பட்டதாரி | 4 |
| 7. | தொழில்முறை பட்டதாரி | 3 |
| 8. | முதுநிலை பட்டதாரி | 2 |
| 9. | Diploma | 5 |

## வயது

| வ.எண் | வயது பிரிவு | |
|---|---|---|
| 1. | 25 - 30 | 3 |
| 2. | 31 - 40 | 7 |
| 3. | 41 - 50 | 5 |
| 4. | 51 - 60 | 6 |
| 5. | 61 - 70 | 1 |
| 6. | 71 - 75 | 3 |

## பெண் வேட்பாளர்கள்

| | |
|---|---|
| ஆண் | 22 |
| பெண் | 3 |
| மொத்தம் | 25 |

## கட்சி வாரியான பாலின பகுப்பாய்வு

| வ.எண் | கட்சி பெயர் | மொத்த வேட்பாளர்கள் | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| 1. | அ.தி.மு.க | 1 | 1 | |
| 2. | பா.ஜ.க | 1 | 1 | |
| 3. | காங்கிரஸ் | 1 | 1 | |
| 4. | நாம் தமிழர் கட்சி | 1 | | 1 |
| 5. | பகுஜன் சமாஜ் கட்சி | 1 | 1 | |
| 6. | சுசி கம்யூனிஸ்ட் | 1 | 1 | |
| 7. | இந்திய குடியரசு கட்சி | 1 | 1 | |
| 8. | சுயேட்சை | 18 | 16 | 2 |
| | மொத்தம் | 25 | 22 | 3 |

## கட்சி வாரியாக கிரிமினல் வழக்குகளில் உள்ள வேட்பாளர்கள்

| வ.எண் | கட்சி பெயர் | மொத்த வேட்பாளர்கள் | கிரிமினல் வழக்குகள் உள்ள வேட்பாளர்கள் | கிரிமினல் வழக்குகள் உள்ள வேட்பாளர்கள் சதவீதம் | கடுமையான வழக்குகள் உள்ள வேட்பாளர்கள் | கடுமையான வழக்குகள் உள்ள வேட்பாளர்கள் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அ.தி.மு.க | 1 | 1 | 100% | - | - |
| 2. | சுயேட்சை | 18 | 1 | 5.5% | 1 | 5.5% |

## பொருளாதார அடிப்படையிலான வேட்பாளர்களை பற்றிய விரிவான ஆய்வு
## கட்சி வாரியான கோடீஸ்வர வேட்பாளர்கள்

| வ.எண் | கட்சி பெயர் | மொத்த வேட்பாளர்கள் | மொத்த கோடீஸ்வரர்கள் | கோடீஸ்வர வேட்பாளர்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | அ.தி.மு.க | 1 | 1 | 100% |
| 2. | பா.ஜ.க | 1 | 1 | 100% |
| 3. | காங்கிரஸ் | 1 | 1 | 100% |
| 4. | நாம் தமிழர் கட்சி | 1 | 0 | 0 |
| 5. | பகுஜன் சமாஜ் கட்சி | 1 | 0 | 0 |
| 6. | இந்திய குடியரசு கட்சி | 1 | 0 | 0 |
| 7. | சுசி கம்யூனிஸ்ட் | 1 | 1 | 100% |
| 8. | சுயேட்சை | 18 | 1 | 5.5% |
| | மொத்தம் | 25 | 5 | 20 |



மேலும் விபரங்களுக்கு

**MyNeta app- யை தரவிறக்கம் செய்யுங்கள்.**
**எங்கள் வலைதளங்களைப் பார்வையிடுங்கள்.**

**www.myneta.info,**
**www.adrindia.org**



Follow us on /adrindia.org @adrspeaks /adrspeaks /adrspeaks


**பெ. ஜோசப் விக்டர் ராஜ்**

ஒருங்கிணைப்பாளர், புதுச்சேரி தேர்தல் கண்காணிப்பகம்

தொடர்புக்கு : 94860 86938, E-mail: pjvraj@gmail.com


### Association for Democratic Reforms / National Election Watch


| Media and Journalist Helpline<br>+91 80103 94248<br>Email: adr@adrindia.org | Maj.Gen. Anil Verma (Retd)<br>Head<br>Association for Democratic Reforms,<br>National Election Watch<br>011 4165 4200,<br>anilverma@adrindia.org | Prof JagdeepChhokar<br>IIM Ahmedabad (Retd.)<br>Founder Member,<br>Association for Democratic Reforms,<br>National Election Watch | Prof TrilochanSastry<br>IIM Bangalore<br>Founder Member,<br>Association for Democratic Reforms,<br>National Election Watch<br>tsastry@gmail.com |
|---|---|---|---|



**Disclaimer:** இந்த அறிக்கையில் உள்ள அனைத்து தகவல்களும் இந்திய தேர்தல் ஆணையத்தின் (https://affidavit.eci.gov.in/) இணையதளத்திலிருந்து ADR -ஆல் எடுக்கப்பட்டவை. இந்த அனைத்து தகவல்களும் பொதுதளத்தில் உள்ளன. சரியான தகவல்களை வழங்க அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளோம். இருப்பினும் ECI இணையதளத்தில உள்ள தகவல்களுக்கும், இந்த அறிக்கையின் மூலம் ADR வழங்கிய தகவல்களுக்கும் இடையில் வேறுபாடு இருந்தால், ECI இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களையே சரியானதாகக் கருதப்பட வேண்டும்.